# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 18.09.2019

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2498/B/18**

திரு.M.நாகராஜன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
எட்டையபுரம் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வாணையத்தால் இன்று (18.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.M.நாகராஜன் அவர்கள் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர், திரு S.K.முத்து, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், எட்டையபுரம் வட்டாட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 13.12.2017 தேதியிட்ட மனுவில், தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் தாலுக்காவிற்கு உட்பட்ட போடுபட்டி கிராமத்தில் உள்ள சர்வே எண் 48-1, 48-2, 48-5, 48-6, 9-3 ஆகியவைகளுக்கு 2015-2016ம் ஆண்டுக்குரிய பயிர்சாகுபடி அடங்கலின் ஒளிநகல் தொடர்பாக தகவல் கோரி எட்டையபுரம் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார். தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 03.02.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை எட்டையபுரம் வட்டாட்சியர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல்

கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 03.04.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (18.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு தகவல்கள் நேரில் வழங்க கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தில் சார்வு செய்தார். இன்றைய விசாரணையில் மனுதாரர் நேரில் ஆஜராகி வழங்கப்பட்ட தகவல்கள் திருப்தி என்று தெரிவித்தார்.

4. ஆவணங்கள் அடிப்படையில் தகவல் வழங்கப்பட்டுள்ளதால், வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 2498/B/18**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
எட்டையபுரம் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம்.

திரு.M.நாகராஜன், த/பெ.முத்துசாமி,
எண்.29/4, பாண்டவர்மங்கலம்,
கோவில்பட்டி வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம்.

Copy to: File / Stock File
SC/PA/20.09.2019